மறுபிரசுரம்
"கலைக்கண்" — 23 - 4 - 1973

# ஈழத்தில் தமிழ் நாவல் இலக்கியம் –

## சில குறிப்புக்கள்

ஆ. சிவநேசச்செல்வன்,
பி. ஏ. [ஆனர்ஸ்],
தமிழ் விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

கலைப்பெருமன்ற வெளியீடு - 3
சித்திரை
1973.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபிரசுரம் : "கலைக்கண்" — 23-4-73

# ஈழத்தில் தமிழ் நாவல் இலக்கியம் —
## சில குறிப்புக்கள்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாற்றின் பல்வேறு துறைகளினதும் வளர்ச்சியும் தொடர்ச்சியும் ஈழத்துத் தமிழிலக்கிய உலகிலே தமது பாதிப்பினைப் பரவலாக ஏற்படுத்தியுள்ளன. தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் ஏற்பட்ட கலாசாரத் தாக்கமும், கலை இலக்கியப் பரிவர்த்தனைகளும் சமமான வளர்ச்சிப்பாதையை வரையிட்டுக் காண வாய்ப்பளிக்கின்றன. தமிழிலக்கியத்தின் முழுமையைத் தொகுத்து நோக்கும் பணியில் ஈழத்து இலக்கிய ஆக்கங்களைப் பிரதேச இலக்கிய வளர்ச்சியாக வகுத்து நோக்குவது அவசியமாகும். "நவீன இலக்கிய உலகின் பேரிலக்கியமெனக் கருதத்தகும்", நாவலிலக்கியம் தமிழ்நாட்டில் வளர்ச்சியுற்றதுபோல ஈழத்திலும் வளர்ச்சி உற்றமையைத் தனியே வகைப்படுத்திப் பண்படிப்படையாக நோக்கிச் சில குறிப்புக்கள் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஈழத்திலே சுதந்திரம் பெற்ற பின்னர் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சி இலக்கியத்தின் பல்துறை வளர்ச்சிகளையும் தொகுப்பாய்வு செய்யவும், ஒப்பியலாய்வு செய்யவும் வேண்டிய தேவைகளை உருவாக்கியது. சில்லையூர் செல்வராசன் எழுதிய தொகுப்புக் கட்டுரையும், 'ஈழத்தில் தமிழ் நாவலிலக்கிய வளர்ச்சி' என்ற நூலும் வளர்ச்சிப் போக்குகளைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகின்றன. 1947ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்புதான் ஈழத்து மக்களுக்குத் தாய்நாட்டு உணர்வும், தனியான கலாசாரம் உண்டு என்ற சிந்தனையும் மெள்ள மெள்ள வளரலாயின. ஏறத்தாழ 1956ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அதனல் ஏற்பட்ட சமூக பொருளாதாரச் சிந்தனை வளர்ச்சியும் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தின. 'சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தை' உணர்த்தும் முயற்சிகள் ஏற்பட்டதும், 'எதிர் காலத்தின் சிறப்பு' உருவாகியது. சமகாலப் பிரக்ஞையுடன் இலக்கியம் வளர்ச்சியடைந்தது.

"பத்தொன்பதாம் நூற்றுண்டிலே இலங்கையில் ஏற்பட்ட சமய மறுமலர்சசியின் ஓர் அம்சமான சைவ மறுமலர்ச்சியின் விளைவாகவும், அச்சமய மறுமலர்ச்சிக்கு ஏதுவாக விருந்த சமூக பொருளாதாரக் காரணங்களின் விளைபொருளாகவும், வலிமை வாய்ந்த அறிவியக்க மொன்று முகிழ்த்தது. அது பலதுறைகளிற் பலனளித்தது. நாவலிலக்கியம் அப் பெறுபேறுகளில் ஒன்று"

[தமிழ் நாவலிலக்கியம் பக். 241]

எனத் தமிழ் நாவலிலக்கிய வளர்ச்சியை நன்கு ஆராய்ந்த கலாநிதி க. கைலாசபதி ஈழத்து நாவலிலக்கியத்தின் தோற்றத்தை முகஞ் செய்து கூறுவர். எனினும ஈழத்தில் ஏற்பட்ட மேலைத்தேயத் தாக்கக் கூறுபாடுகளையும், தென்னிந்திய தாக்க விளைவுகளையும், சிங்கள நாவலிலக்கியத்தோற்ற வளர்ச்சிப் போக்குகளையும், அங்கிளோ இலங்கை இலக்கிய மரபையும் இணைத்து நோக்குவது பல பண்புகளையும் விளங்கிக் கொள்ள உறுதுணையாகவிருக்கும். சிங்கள இலக்கிய வளர்ச்சிப் பண்புகளைப் பற்றி எழுதிய பேராசிரியர் ஈ. ஆர். சரத்சந்திராவின் கருத்துக்களும் நோக்கப்பட வேண்டும். சுருங்கக் கூறின், ஆக்க இலக்கியப் பாதையை நோக்கி வளர்ச்சியடைந்த தமிழ் இலக்கியத்தில் பிரதேச இலக்கியமாக ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சி ஆய்வு செய்யப்பட வேண்டும்.

சென்ற ஆண்டில் ஈழத்து நாவலிலக்கியப் பட்டியல் தகவல் தேட்ட முயற்சிகளின் காரணமாக விரிவடைந்துள்ளது. எஸ். எம். கமாலுதீன் ஈழத்தின் முதலாவது நாவலாசிரியராக அறிஞர் சித்திலெவ்வையை அறிமுகம் செய்துள்ளார். [22-7-72 தினகரன் வாரமஞ்சரி.] 1972 மே ஜூன் மல்லிகை இதழ்களில் இக் கட்டுரையாசிரியர் மங்களநாயகம் தம்பையாவை (நொறுங்குண்ட இருதயம்) ஈழத்தின் முதலாவது நாவலாசிரியையாக அறிமுகஞ் செய்துள்ளார். பின்னர் சோ. சிவபாதசுந்தரம் திருகோணமலை சரவணமுத்துப் பிள்ளையின் மோகனங்கி பற்றிய சில விபரங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டுள்ளார். இவை நாவலிலக்கிய ஆரம்பகாலப் பண்புகளை நோக்க அவசிய மானவையாகும்.

தமிழில் வெளிவந்த முதலாவது நாவலாக 1879ஆம் ஆண்டில் வேதநாயகம்பிள்ளை எழுதிய பிரதாபமுதலியார் சரித்திரந் தோன்றியது. இதனைத் தொடர்ந்து எஸ். எம். கமாலுதீனால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள அஸன்பே சரித்திரம் 1885ல் வெளிவந்துள்ளது. இதனை எழுதிய அறிஞர் சித்திலெவ்வை ஈழத்தின் முதலாவது தமிழ் நாவலாசிரியராவர். இதுவரை காலமும் 1891ல் ஊசோன் பாலந்தைக் கதையை எழுதிய திருகோணமலை இன்னாசித்தம்பியே முதலாவது நாவலாசிரியராகக் கருதப்பட்டார். தொடர்ந்து 1895ல் திருகோணமலை த. சரவணமுத்துப் பிள்ளை மோகனாங்கி என்ற நாவலையும் வெளியிட்டுள்ளார்.

பட்டியல்ரீதியாக வளர்ச்சியை நோக்காது ஆரம்பகால நாவலிலக்கியப் பண்புகளை நோக்குவது சாலச் சிறந்ததாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழமெங்கணும் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள் நாவலிலக்கியத்திற்கு உரிய பாதையைச் சமைத்துக் கொடுத்தன. குறிப்பாக எஸ். எம். கமாலுதீனால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள சித்திலெவ்வை முஸ்லிம் நேசன் ஆசிரியராகவும், இலங்கைச் சுப்பிறீம் கோட்டுப் பிறக்ரராகவும் விளங்கியுள்ளார். உண்மையில் அறிஞர் சித்திலெவ்வையின் பத்திரிகைத் துறைத்தொடர்பும் காலப் பின்னணியும் ஆழ்ந்து நோக்க வேண்டியதொன்றாகும். சித்திலெவ்வையின் நாவலும், பண்புகளும் ஒருபுறமிருக்க அவர் போன்றோருக்கும் பிறருக்கும் ஏற்பட்ட கலாசார அறிவுநிலைச் சூழலும் (Cultural and Intellectual Amtosphere) முக்கியமாகும். இந்தப் பின்னணியின் மூலக் கூறுபாடுகளிலிருந்து ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சியையோ, சிங்கள நாவல் வளர்ச்சியையோ வரையிட்டுக் காணவேண்டும். நாவல் என்ற இலக்கிய வகை மக்கள் மனதில் நுழையும் வாய்ப்புப் பின்னணியிலிருந்தே தோற்ற வளர்ச்சிப் பாதையையும் கோடிட்டுக் காட்டலாம்.

ஈழத்தின் ஆரம்பகால நாவலாசிரியர்கள் தாம் படைத்த நாவல்களைத் தூய கலைவடிவமாக நினைத்துப் படைக்கவில்லை. குறிப்பாக மேலைத்தேய கலாசாரத் தொடர்பு நாவலிலக்கியத்தின் தோற்றத்திற்குக் காரணமாகும். இந்தியாவிலும்சரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலும்சரி கிறீஸ்தவ கலாசாரத் தாக்கம் பிரச்சாரத் தேவைகளுக்கு வசன இலக்கியத்தை வலுவுள்ள ஊடகமாகக் கொள்ள முனைந்தது என்பது உண்மை. குறிப்பாக மேலைத்தேய கலாசாரத்தில் நன்கு பரிச்சயமுள்ள அறிஞர் சித்திலெவ்வையின் ஆக்க முயற்சிக்கும் இதுவே காரணமாகலாம். இவருக்கு அங்கிளோ இலங்கை எழுத்தாளர்களின் முயற்சியும், அக்கால சிங்கள எழுத்தாளர் முயற்சியும் காரணமாக விருந்ததோ என்பதும் கவனிக்கப்பட வேண்டும். தமிழில் நாவல் முயற்சியை ஆரம்பித்த வேதநாயகம்பிள்ளையும் ஈழத்தில் இரண்டாவது நாவலை எழுதிய இன்னுசித்தம்பியும் கிறிஸ்தவராவர். பொதுவாக நாவலிலக்கிய முயற்சி ஆரம்பத்திற்குக் கிறிஸ்தவப் பின்னணியும் காரணம் என்பது பரவலாக நிலவிவரும் கருத்தாகும்.

"நாவலிலக்கிய ஆரம்பத்தின் முன்னர் கிறீஸ்தவர்கள் சமயப் பிரச்சாரத்திற்கு நாட்டுக்கூத்து நாடகம் ஆதியனவற்றைப் பயன்படுத்தினர். அச்சக வசதிகள் ஏற்பட்டதும் நாட்டுக் கூத்துப் பிரதிகள் நூல் வடிவு பெற்றன. அச்சுப் புத்தகமூலம் கதை கூறும் பண்பு சில காலமாக இவ் வழியாக மேற்கொள்ளப்பட்டது. இது நாவலிலக்கியத் தோற்றத்திற்குக் காரணமாகியது. நாட்டுக் கூத்துக் கதை பின்னர் வசனவடிவிலாகியது. இவ்வாறு னவொன்றே 'உசோன் பாலந்தைக்கதை' என சில்லையூர் செல்வராசன் கூறுகிருர் (Community 5 Ceylonese Writing-Sillaiyoor Selvarajan). மேலும் நாட்டுக் கூத்து மரபிலும் புனைகதை மரபிலும் பயன்படுத்தப்பட்ட போர்த்துக்கேயக் கதையாகிய உசோன் பாலந்தைக் கதை 1890ஆம் ஆண்டளவில் ஓசன் சகா பலன்ரைன் (Osan sahā Palenten) என சிங்கள நாடகமாக அமைக்கப்பட்டதும் அவதானிக்கத் தக்கது.

எனினும் ஈழத்தின் நாவலிலக்கிய மரபிற்குரிய மூலம் அங்கிளோ இலங்கை எழுத்தாளர் மரபிலிருந்து வகுத்து நோக்கப்படலாம். ஈழத்தில் புனைகதை மரபிற்குரிய சிந்தனை அங்கிளோ இலங்கைக் கலாசார வழியாகவே வந்தது. ஆங்கில நாவல்கள், பத்திரிகைகள், இலக்கிய மாசிகைகள், மேடைப் பிரசங்கங்கள், சமயத் துண்டுப் பிரசுரங்கள் அக்கால மக்களால் நன்கு படிக்கப்பட்டன. ஆங்கில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை முறையை உணருவதற்கு நாவல்கள் கருவியாயின. ஆங்கில வாழ்க்கையையும் மரபையும் உணருவதற்கு ஈழத்து வாசகர்கள் நாவல்களை நாடிச் செல்லலாயினர். படிப்படியாக பத்தொன்பதாம் நூற்றுண்டு நடுக்கூறு முதல் ஆங்கில நாவல்களின் செல்வாக்கு அதிகரித்து வந்தது.

ஈழத்திலே 1820ஆம் ஆண்டில் இலங்கை இலக்கிய சங்கம் என்ற பெயருடன் ஒரு சங்கம் உருவாகியது. இது பின்னர் இலக்கிய விவசாய சங்கமாக மாறியது. ஈழத்தவரின் பல்துறை ஆற்றல்களை வளர்க்குமமுகமாக, பல்வேறு இலக்கிய, சமய விடயங்கள் இங்கு விவாதிக்கப்பட்டன. 1836ஆம் ஆண்டிலே பீற்றர் பேர்சிவல் பத்துப் பேர்களைக் கொண்டு இச்சங்கம் அமைந்திருந்ததாகக் கூறியுள்ளார். இலங்கையருக்கு ஆங்கிலச் சிந்தனைகள் வளர இவை காரணமாக விருந்தன. 1845ஆம் ஆண்டில் இலங்கையில் ஆரம்பமாகிய ராயல் ஆசியச் சங்கக்கிளை — இலக்கியம், வரலாறு, கலை சம்பந்தமான விடயங்களை ஆய்வுசெய்யும் வாய்ப்பை ஏற்படுத்தியது. ஆங்கிலேயருடன் சமமாக ஈழத்தவரும் ஆய்வியல் துறையில் ஈடுபட முனைந்தனர். றோயல் ஆசியச சங்க அங்கத்தவர் ஈழத்துச் சமகாலப் பிரச்சினைகளில் அதிக ஆர்வம் காட்டினர். இச்சங்கத்தினதும் சார்ந்தோரதும், ஆய்வுகளும் சிந்தனைகளும் பின்னர் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கு, ஆங்கில மரபு வழி சுதேச இலக்கியங்கள் உருவாக்கும் உணர்வினைக் கொடுத்தன.

(English Literature in Ceylon- Yasmine Goonaratne PP–60)

மேலே கூறப்பட்ட ஆங்கிலோ இலங்கை இலக்கியம் உருவாவதற்குக் காரணமான பண்பை நாம் தமிழ் சிங்கள இலக்கியத் தோற்றத்துக்கு மறைமுக உந்து சக்தியாகக் கொள்ளலாம்.

மேலைத்தேய இலக்கியங்கள் ஈழத்து வாசகர்களுக்கு நூல்நிலையங்கள் மூலமும் பல்வேறு விற்பனை நிறுவனங்களின் மூலமும் கிடைத்து வந்தன. 1830ஆம் ஆண்டளவில் கொழும்பில் உள்ள கரிசன் விநியோகநூல்நிலையம் ஈழத்து வாசகர்களுக்கு நாவல்கள் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது. நகர நூல்நிலையங்களிற் பிரித்தானிய மாசிகைகளும், பத்திரிகைகளும் அங்கத்தவர்களுக்குக் கிடைத்து வந்தன. 1804ஆம் ஆண்டளவில் கொழும்பு பெற்று நூல்நிலையம், காலி வாசிகசாலை, திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணமலை வாசிகசாலை, இரத்தினபுரி நூல்நிலையம், கண்டி ஐக்கிய சேவை நூல் நிலையம் ஆதியன முக்கியத் துவம் வாய்ந்தனவாக விளங்கின. குறிப்பாகச் சமய இலக்கியங்கள் ஒவ்வொரு மிசனரி சங்க நூல்நிலையங்களிலும் கிடைத்தன. (English Liter–ature in Ceylon - 1815 - 1878 Yasmine Goonaratne PP. 106-61)

இவ்வாறான வாய்ப்புகள் ஈழத்திலுள்ள கல்விபெற்ற மேலவர் குழாத்திற்குக் கிடைத்துவந்தன.

ஈழத்தில் ஆரம்பகால நாவலாசிரியர்கள் குறிப்பாக இன்னாசித்தம்பி, சரவணமுத் துப்பிள்ளை ஆதியோர் திருகோணமலையிலே தோன்றியமைக்கு திருகோணமலை நூல் நிலைய வசதியும் வாழ்க்கையும் ஒரு காரணமாகலாம்.

ஆங்கில வாழ்க்கை முறையையும், மரபுகளையும் உணரும் நோக்கிலே மக்கள் கவனம் ஆங்கில நாவல்கள் பால் ஈர்க்கப்பட்டன. உண்மையில நாவல் வாசிக்கும் வேகம் படிப்படியாக அதிகரித்தது. Young Ceylon Vol 1 No 9 (Oct. 1850) – Dandis de Silva Gunaratna (P. 200) இந்த ஆர்வம் படிப்படியாக நாடு முழுவதும் கல்வி வல்ல உயர்ந்தோர் குழாமை ஆட்கொள்ளத் தொடங்கியது. ஆரம்ப அங்கிளோ இலங்கை நாவல்களோ தமிழ், சிங்கள நாவல்களோ இரவல் பண்பு கொண்டவையாக விளங்குவதற்கும் இதுவே காரணமாகலாம். பின்னர் சூழ்நிலையாதிக்கம், ஈழத் தமிழ் நாவல்களைப் பொறுத்தவரை தமிழ் நாட்டுத் தாக்கம் ஆதியன உருவாகின. நேரடியான தொடர்புகளை வெளிப்படையாகக் காண முடியாவிடினும் மறைமுகத் தாக்கத்தை மனங்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்தப் பின்னணியையும், தாக்கத்தையும் மேலும் உணர்ந்து கொள்வதற்குக் குறிப்பாக சித்தி வெவ்வை, இன்னாசித்தம்பி, சரவணமுத் துப்பிள்ளை ஆகியோருடைய வாழ்க்கையையும், பின்னணியையும் தெளிவாக ஆய்வு செய்ய வேண்டும். ஈழத்தின் சமூக பொருளாதார அரசியற் பிரச்சினைகள் இவர்களைப் பாதிக்கவில்லை. இந்த உண்மை நாவலிலக்கியத்திற்கும் பொதுப்பண்பாகவே கொள்ளலாம். வேதநாயகம்பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரத்தையும் இந்நோக்கில் அவதானிக்கலாம். ராஜமையர், மாதவையர் ஆதியோரில் இந்நிலை மாறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் ஆரம்பகால நாவல்களிற் பெருமளவு நீதி போதனைகளும், அந்நிய நாட்டுச் சித்திரிப்புகளும், கிறித்துவப் பிரசாரப் போக்குகளும் நிரம்பிய தன்மையைக் காணலாம். திருகோணமலை சரவண முத்துப்பிள்ளை எழுதிய மோகனாங்கியும், சி. வை. சின்னப்பபிள்ளை எழுதிய வீரசிங்கன் கதையும் சரித்திர நாவல்கள். மோகனாங்கியை வரலாற்றுச் செய்திக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டியுள்ளமையை சோ. சிவபாதசுந்தரம் எடுத்துக் காட்டி அந்நாவலின் தன்மையைத் தெளிவுபடுத்தியுள்ளார். பின்னர் வெளிவந்த 'சொக்கநாத நாயக்கர்' என்ற இரண்டாவது வெளியீட்டின் மாறுபாடுகளையும் குறிப்பிட்டு

"தமிழ் நாவல் முதல்வர்களில் திருகோணமலை த. சரவணமுத்துப்பிள்ளை சிறப்புமிக்க ஒருவர். அவருடைய மோகனாங்கி தமிழில் வெளிவந்த முதலாவது சரித்திர நாவல்"

எனக் கூறியுள்ளார் (தினகரன் வாரமஞ்சரி. — 1972 நவ. 19). ஆரம்பகால நாவல்களில் சம்பாஷணைகள் நாடக பாணியில் அமைந்துள்ளமையும், பேச்சுவழக்கு மரபுகள் அமைந்துள்ளமையும் அவதானிக்க வேண்டியவை.

ஈழத்தின் முதலாவது நாவலாசிரியையான மங்களநாயகம் தம்பையாவின் நொறுங்குண்ட இருதயம், (1914) அரியமலர் ஆகிய நாவல்களில் கிறிஸ்தவ இயக்கப் பிரசாரமும், சமூக சீர்திருத்தக் கருத்துக்களும் மேலோங்கி நிற்கின்றன. வாழ்ப்பாணத்துச் சூழற் சித்திரிப்பும், கதை நிகழிடமான கிராமங்களின் வர்ணனையும் சிறந்த எழுத்து நடை மூலம் வெளியாகின்றன. இந்நாவல் ராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரத்தோடு இணைத்து நோக்கக் கூடிய பண்புகள் கொண்டனவாக உள்ளது. (அரிய மலர் என்ற நாவல் உதயதாரகை பத்திரிகையில் 1930 முதல் தொடராக வெளியாகியுள்ளது. பின்னரே நூலாகப் பிரசுரிக்கப் பட்டது.)

குறிப்பாக 1925-ம் ஆண்டளவில் வெளிவந்த இடைக்காடரின் 'நீலகண்டன் ஓர் சாதி வேளாளன்', 'சித்தகுமாரன்' ஆகிய நாவல்களைத் தேசியப் பிரச்சினையை ஓரளவு தொட்டுக் காட்டும் நாவல்களாகக் கொள்ளலாம். மேலை நாட்டுப் பண்பாட்டிலும் சிந்தனையிலும் ஊறிய இடைக்காடர், சுதேச கலாசாரத்தின் தூய்மையை அழுத்திக் கூற முயல்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகால நாவலாசிரியர்கள் கதைகூறும் உத்தியிலோ அன்றிச் சமுதாயப் பிரக்ஞை கொண்ட உணர்வுடனோ எழுதுவதில் அதிக கவனம் செலுத்தவில்லை. பழைய கதை சொல்லும் பாணியிலே புராண மரபினை மனங் கொண்டு நாவல்களை உருவாக்கினர். குறிப்பாக ‘விஜய சீலம்’, ‘கோபால நேசரத்தினம்’, ‘காந்தமலர்’ ஆகிய நாவல்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். காந்தமலர் என்ற நாவலின் பதிப்புரையில் சி. வே. தாமோதரம் பிள்ளை புராண காப்பியங்களோடு இணைத்து நாவலை இனங்காண முனைந்துள்ளார். பரவலாக நோக்கும்போது ஆரம்பகால நாவல்கள் யாவும் மக்களின் உள்ளார்ந்தமான பிரச்சினைகளை எள்ளளவும் தொட முயலவில்லை. நாவல்களில் பேச்சு வழக்குச் சொற்கள் பெரிதும் கையாளப்பட்டிருப்பினும் அவை உரையாடலோடு இணைந்து வராமையினால் இயல்பாக அமையவில்லை. பரவலாகப் பல நாவலாசிரியர்களும் பண்டித நடையையே கையாள முனைந்து நாவலின் இயற்கைப் பண்பை இழக்கச் செய்து விட்டனர். கலாநிதி க. கைலாசபதி கூறுவது போல ஆரம்பகாலத்து நாவல்களில் நாவலாசிரியர்கள் தாமே நின்று கதையை நடத்திச் செல்லும் தன்மையினால் இயல்பான பேச்சு வழக்கு நடையினை விழுங்கிவிட்டனர் எனலாம். பெருமளவு உரையாடலை எளிமையாக எழுத முயன்றிருப்பினும், வெறும் சொற்செட்டும், வார்த்தை ஜாலங்களும் மிகுந்திருக்கின்றன. தமிழ்நாட்டு நாவல்களிற் பரவலாகக் காணும், பிராமணர் இல்லங்களிற் கேட்கும் உரையாடலும் முதலியார், செட்டி, பிள்ளை ஆகியோரது வீட்டுப் பேச்சும் செறிந்து வருவது போல ஈழத்து நாவல்களில் யாழ்ப்பாணத்து மரபு வழக்குகளை முழுமையாகக் காணமுடியாதாயினும், பாத்திரப் பேச்சு வழக்குகளைக் கையாளும் போது கொச்சை வழக்குகளை ஆங்காங்கே பயன்படுத்தியிருப்பினும் பரவலாக இலக்கண சுத்தமான தமிழை எழுத வேண்டும் என்ற வேகம் இவர்களைப் பின்வாங்கச் செய்துவிட்டது.

ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின், கோபால நேசரத்தினம், காசிநாதன் நேசமலர் ஆகிய நாவல்களில் சமூகப் பிரச்சினைகள் கையாளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப்பேச்சுவழக்குச்சொற்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் ஆசிரியர் போதனை மனோநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையே பெருமளவும் கொண்டிருந்ததால் நாவலின் இயற்கைப் பண்பைத் தவற விட்டு விடுகின்றார். முகவுரையிலே தமது நாவலின் நோக்கங்களாகச் சீதனப் பிரச்சினைகள், மதுபானத்தால் வரும் கேடு, தீயவர் சகவாசத்தால் நேரும் அனர்த்தம், பரத்தையரைச் சேர்வதால் ஏற்படும் பழி ஆதியனவற்றையே தமது குறியாகத் தெரிவித்துள்ளார். சுருங்கக் கூறின் குறைபாடுகளுக்குப் புறம்பாக—கோபால நேசரத்தினம் யாழ்ப்பாண மண்வாசனை வீச எழுதப்பட்ட நல்ல நாவல் எனக் கூறலாம்.

ஆரம்ப நாவலாசிரியர்களின் சமயப் பிரசாரத்தையே தமது முழு நோக்காகக் கொண்டு எழுதியவர்களாக மங்களநாயகம் தம்பையா, யோன் மேரி, சாள்ஸ் ஸ்ரிக்னி ஆகியோரைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டில் ஆரம்ப காலத்தில் மர்மப் பண்புகளோடு நாவல்கள் தோன்றியதுபோல ஈழத்தில் தோன்றவில்லை. குறிப்பாக 1930ஆம் ஆண்டுக்குப் பின்னரே மர்மபபண்பு வாய்ந்த நாவல்கள் தோன்றின. அவையும் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையே நடைபெற்ற போராட்டம் போன்று இதிகாச வகையில் கதைகளைக் கூறின.

ஏறத்தாழ 1930ஆம் ஆண்டில் ஈழத்திலே குறிப்பாகப் பொதுமக்கள் யுகம் ஆரம்பமாகின்றது. டொனமூர் அரசியல் திட்டமும் அதன் பிரதிபலிப்பான சமூக சிந்தனைகளும் பரவலாக ஈழநாட்டில் பல்வேறு துறைகளிலும் புதிய சிந்தனைகளை உருவாக்கின. எனினும் இப் பிரச்சினைகள் எவையும் நாவலாசிரியர்களைக் கவரவில்லை. அரசியல் பின்னணியை அல்லது கலாசாரச் சீர்குலைவை வெளிக்கொணரும் முகமாகத் தோன்றவில்லை. தமிழ் நாட்டிலே காந்திய சகாப்தச் சிந்தனைகள் சுதேச உணர்வுகளைக் கிளறச் செய்தமை போல ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் எவ்வாறான தாக்கமும் ஏற்படவில்லை. தேசியப் பிரச்சினையையோ கலாசாரச் சீர்குலைவையோ பிரதிபலிக்கும் நாவல்கள் தோன்றாமையினால் நாவல் இலக்கியவகை 'மக்கள் மத்தியில பெரும் செல்வாக்குப் பெறவில்லையோ எனவும் சந்தேகிக்க இடமளிக்கின்றது. பாரத நாட்டில் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சி, போராட்டம் ஆதியன இங்கு தோன்றாமையே காரணம் எனவும் கூறலாம்.

கல்வி வளர்ச்சியின் காரணமாகவோ பரவலாக உருவாகியிருந்த சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களின் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவோ, சமூகக் குறைபாடுகளை அலசும் நாவலாக 1935ம் ஆண்டில் வெளியாகிய செல்வரத்தினம் என்ற நாவல் அமைகிறது. தொடர்ந்து 1938இல் ஏ. செல்வநாயகம் என்பவர் எழுதிய செல்வி சரோஜா அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி என்றநாவல் பிரச்சாரப் பண்புகொண்டு விளங்குகின்றது. இதே காலகட்டத்தில் வீரகேசரி ஆசிரியராக விருந்த நெல்லையா எழுதிய இரத்தினவளி அல்லது காதல் மாட்சி என்ற நாவலும், சோமாவதி அல்லது இலங்கை இந்திய நட்பு என்ற நாவலும் சமூக ஒற்றுமையை நிலை நிறுத்தும் நாவல்களாக அமைகின்றன.

ஈழத்தில் மறுமலர்ச்சி இயக்கம் உருவாக்கிய சமூக விழிப்புணர்ச்சி தேசிய விழிப்புணர்ச்சி ஆதியன நாவலிலக்கியத்திலும் பரவலாகப் பரந்த வளர்ச்சிப் பாதையினை ஏற்படுத்தியது. 'ஈழகேசரி'ப் பத்திரிகையின் தோற்றமும், தமிழ்நாட்டு இலக்கிய விழிப்புணர்ச்சியின் தாக்கமும் பலரை எழுத்துலகுக்கு இட்டுச் சென்றன. பிரசுர வசதிகளும், மறுமலர்ச்சி வேகமும், தொடர்கதைஆர்வமும்நாவல் வளர்ச்சியை உருவாக்கின. கனக. செந்திநாதன் எழுதிய விதியின்கை, வெறும்பானை, வரதர் எழுதிய வென்றுவிட்டாயடி ரத்னா, சம்பந்தன் எழுதிய பாசம் ஆதியன குறிப்பிடத்தக்கன. இலங்கையர் கோன் மொழிபெயர்த்த முதல் காதல் என்ற நாவலும் வெளிவந்தது. ஏறத்தாழ 1950ஆம் ஆண்டின் பின்னர் ஈழத்துப் பத்திரிகைகளின் ஆர்வத்தால் தொடர்கதைகளாகவும், நூல் வடிவமாகவும் நாவல்கள் வெளிவந்தன. இக்கால நாவலாசிரியர் வரிசையில் யாழ்ப்பாணத்துத் தேவன். கே. வி. எஸ். வாஸ், அ. செ. மு, கலாநிதி க. கணபதிப்பிள்ளை, த. சண்முகசுந்தரம், இராஜ அரியரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் தேவனின் நாவல்கள் மனோதத்துவ ரீதியில் எழுந்தவை. கே. வி. எஸ் வாஸின் நாவல்கள் அதியற்புதப் பண்புகள் வாய்ந்தவை. அ. செ. மு. யாழ்ப்பாணத்து மண்வாசனை வீச சமூகப் பிரச்சினையைக் குறியிட்டுக் காட்டினார். கலாநிதி கணபதிப்பிள்ளை சமூக ஏற்றத் தாழ்வுப் பின்னணியில் பேச்சு வழக்குக்கு அழுத்தம் கொடுத்தார். த. சண்முகசுந்தரத்தின் நாவல்கள் மனிதமனங்களின் மெல்லுணர்வுகளை லேசாகத் தொட்டுக்காட்டின.

1950 ஆம் ஆண்டின் பின்னர் முன்னணிக்கு வந்த நாவலாசிரியர்களில் இளங்கீரன், சொக்கன், வ. அ. இராசரத்தினம், எஸ். பொன்னுத்துரை ஆதியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவப் பண்புகளுடன் நாவல்கள் எழுதினர். 1950 முதல் ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகள் இளங்கீரன் ஈழத்திலக்கிய வரலாற்றில் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நல்ல நாவல்களைப் படைத்தவராக விளங்குகிறார். குறிப்பாக ஈழத்தில் வாழும் கிராமமக்களினதும், நகரமக்களினதும் பிரச்சினைகளை மானசீகமாக நோக்கி எழுதிஞர். கலாநிதி க. கைலாசபதி இந்நாவலை ஈழத்துச் சமூக பொருளாதார அரசியற் பின்னணியின் அடிப்படையில் நன்கு ஆய்வு செய்துள்ளார். (தமிழ் நாவல் இலக்கியம்—க. கை) யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்க வாழ்க்கை முறையை நடுநின்று திறனாய்வு செய்தது இளங்கீரனின் சிறப்பம்சங்களில் ஒன்ருகும். நீதியே நீ கேள் இங்கிருந்தது எங்கே ஆகிய நாவல்கள் பண்படிப்படையில் தகழி சிவ சங்கரப்பிள்ளையின் 'செம் மீனுடனும்' மாட்டின் விக்கிரமசிங்ஹவின் 'கம்பெரலியா' வுடனும் ஒப்பிடக் கூடியவை (Community 5 Ceylonese writing Sillaiyoor Selvarajan. PP 102)

சொக்கன் எழுதிய மலர்ப்பனி, செல்லும் வழி இருட்டு ஆகிய நாவல்களும் வ. அ. இராசரத்தினம் எழுதிய கொழுகொம்பு, துறைக்காரன் ஆகியவையும் குறிப்பிடக்கூடிய நாவல்களாகும். கிழக்கு மாகாணத்து மீனவ வாழ்க்கையையும், சமூகப் பிரச்சினைகளையும் ஆழ்ந்து நோக்குபவராக வ அ. இராசரத்தினம் அமைகின்ருர்.

எஸ். பொன்னுத்துரையின் நாவல்கள் அவர் கையாண்ட பொருள்களுக்குப் புறம்பாக நோக்கும்போது, சிறந்த கலைப்படைப்புகளாக அமைகின்றன. தீ, சடங்கு போன்றவை அவரது ஆற்றலைப் புலப்படுத்துபவை.

அறுபதாம் ஆண்டுக்குப் பின்னர் வெளிவந்த நாவலாசிரியர்களில் செ. கணேசலிங்கனின் நாவல்கள் பற்றி ஒரு குறிப்புக் கூறி இக் கட்டுரையை முடிக்க விரும்புகின்றேன். ஈழத்து அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமூக மாறுபாடுகளின் அடிப்படையில் நோக்கி அதிகம் எழுதியவர். இவர் ஒருவரே எனக் கூறலாம். செவ்வானம், தரையும் தாரகையும், போர்க்கோலம் என்பன ஈழத்துப் பிரச்சினைகளையும், வர்க்க முரண்பாடுகளையும் காட்டுவனவாகும் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளையும், நாவலிலக்கிய முயற்சிகளையும் சமகால அரசியல் சமூக வரலாற்றுப் போக்குகளோடும் மாறுபாடுகளோடும் இணைந்து ஆய்வு செய்யவேண்டும்.

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org